

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதியின் பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் கோகுல் மற்று நகர மன்ற உறுப்பினர் மைதிலி கோகுல் ஆவடி தொகுதியின் பகுஜன் சமாஜ் கட்சியின் துணை தலைவர் 8 வது வார்டு கவுன்சிலருமான கரிகாலன் அக்கட்சியிலிருந்து விலகி திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்கள். உடன் நகர கழக துணைச் செயலாளர் நாகராஜ், நகர இலக்கிய அணி அமைப்பாளர் பி.எல்.ஆர்.யோகா, மற்றும் தங்கராஜ், ஜெயக்குமார், ஆறுமுக ராஜா, சதீஷ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை, செம்மஞ்சேரி, செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியில் நேற்று (16.01.2025) பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பள்ளிக் கல்வித் துறை மற்றும் இந்தியப் பள்ளிகள் விளையாட்டுக் குழுமம் இணைந்து நடத்தும் "தேசிய அளவிலான 17 வயதுக்கு உட்பட்ட மாணவிகளுக்கான 68 ம் ஆண்டு தேசிய அளவிலான கூடைப்பந்தாட்ட விளையாட்டு போட்டிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சட்ட மன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ், பள்ளிக் கல்வித் துறைச்செயலாளர் சோ. மதுமதி, தொடக்க கல்வி இயக்குநர் முனைவர். பூ.ஆ. நரேஷ், பள்ளிக்கல்வித் துறை உத்திரபிரதேசம் மற்றும் இந்திய பள்ளிகளின் விளையாட்டுக் கூட்டமைப்பின் உறுப்பினர் முனைவர் பி.பாபு மனோகரன், செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியின் தலைவர் முனைவர் பி.பாபு மனோகரன், முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் இ. கோபாலகிருஷ்ணன், முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர் அ.புகழேந்தி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சங்கராபுரம் வட்டம் – சோழம்பட்டு கிராமம்,

# மணிமுத்தா நதியின் குறுக்கே தடுப்பணை!

## சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் தா.உதயசூரியன் கோரிக்கை!



சென்னை, ஜன.17 - சட்டப்பேரவையில் சங்கராபுரம் தொகுதி - கழக உறுப்பினர் தா.உதயசூரியன் எழுப்பிய கேள்வியும் அதற்கு அமைச்சர் துரைமுருகன் அளித்த பதிலும் வருமாறு:-

**தா. உதயசூரியன்:** சங்கராபுரம் வட்டம், சோழம்பட்டு கிராமம், மணிமுத்தா நதியின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் துரைமுருகன்:** கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், சோழம்பட்டு கிராமம் அருகே மணிமுத்தா நதியின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

**தா. உதயசூரியன்:** சோழம்பட்டு கிராமம், மணிமுத்தா ஆற்றின் குறுக்கே மட்டுமல்லாமல், கச்சிராபாளையம், கோமுகி நதியின் குறுக்கேயும், அதே போல பாப்பகால் ஓடையின் குறுக்கே பம்பரப்பட்டு என்ற இடத்திலும், ரிஷிவந்தியம் அருகிலுள்ள மணலூர்பேட்டையின் குறுக்கே அணைக்கட்டு வேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம் 2, 3 முறை கருத்துருக்கள் கொடுத்திருக்கிறோம். அதனுடைய கருத்துருக்கள் துறைக்கு வந்திருக்கிறது. ஆகவே, மழைக்காலங்களில் வருகிற தண்ணீரைத் தேக்கி அங்கிருக்கின்ற கிணறுகளுக்கு நீர் உறிஞ்சுவதற்கும், நீராதாரம் பெருகுவதற்கும், கால்நடைகளுக்கு ஏதுவாக பயனடைகின்ற வகையிலும் மேற்படி நான் சொன்ன அந்த அணைக் கட்டுகளை அமைச்சர் அவர்கள் நிதிநிலை மைக்கேற்ப முன்னுரிமை அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த முன்னுரிமையின் அடிப்படையில், அவற்றையெல்லாம் இந்த நிதியாண்டிலே எடுத்து, அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த தடுப்பணையை அமைக்க 2021-2022-ஆம் ஆண்டே முடிவு செய்யப்பட்டு, ரூபாய் 9 கோடியே 6 இலட்சம் அளவுக்கு மதிப்பீடு தயாரிக்கப் பட்டுவிட்டது. ஆனால், அன்றைய தினம் நிதிநிலைமைக்கேற்ப இடம் தரவில்லை. தற்போது அரசின் கொள்கைபடி, நிலத்தடிநீர் உறிஞ்சுதல் வகையில், *overexploited and critical* பகுதிகளில் மட்டுமே தடுப்பணைகளை அமைக்க முன்னுரிமை வழங்கப்படுகிறது. இத்தடமானது நிலத்தடிநீர் உறிஞ்சுதல் வகையில், உறிஞ்சுதல் வகைப்பாட்டில் *safe zone* அமைந்துள்ளது. எனவே, முன்னுரிமை அடிப்படையில் அப்பகுதியில் தடுப்பணை அமைக்க தற்போது வாய்ப்பில்லை. இத்தடத்திற்கு மேல்புறம் 3 கிலோ மீட்டர் தொலைவில் தளவாய்பட்டு அணைக்கட்டும், கீழ்புறத்தில் 2 கிலோ மீட்டர் தொலைவில் மூரார்பாளையம் அணைக்கட்டும் அமைந்துள்ளது. இருப்பினும், இதனை ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கவனிக்கப்படும்.

**தா. உதயசூரியன்:** ஐயா கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஓர் அழகான வார்த்தையைச் சொல்வார்கள். அதாவது, கொட்டாங்குச்சி போல் இருக்கின்ற ஏரிகளெல்லாம் தாம்பூல தட்டு போல் ஆகியிருக்கிறது; தூர் வாரப்படும் என்று சொன்ன நிகழ்வுகள் உண்டு. அதனுடைய அடிப்படையில், 50 ஆண்டுக்காலமாக வடக்கனந்தல் அருகில் இருக்கின்ற கோமுகி அணை கட்டப் பட்டு 50 ஆண்டுக் காலமாகிறது. 50 ஆண்டுக் காலம் ஆகியிருக்கின்ற காரணத்தினால் முழுக்க, முழுக்க கல்வராயன் மலை அடிவாரத்திலே கோமுகி அணை இருக்கிறது. ஆகவே, 30 சதவிகிதம் அளவுக்கு மண் அரிப்பு ஏற்பட்டு, தூர்ந்திருக்கிறது. ஆகவே, 70 சதவிகிதம்தான் நீர் கொள்ளளவுக்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் *safe, semicritical, critical, overexploited zone* என்று இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் வெறும் ஆற்றுப்படுகைதான் இருக்கிறது. மலைக்கு அருகில் தூர்வாருகின்றபோது முதலமைச்சர் அவர்களின் 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்கிற திட்டத்தின்கீழ் கொடுக்கப் பட்டிருக்கிறது. இத்திட்டத்திற்கு ரூ.25 கோடி மதிப்பீடு என்றும் துறைக்கு வந்திருக்கிறது. ஆகவே, கோமுகி அணையைத் தூர்வாருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். அதுமட்டுமல்லாமல், நான் சொன்ன இந்த *semicritical, critical zone* இல்லாமல் அந்த அணைக்கு மேல் பொட்டியம், கல்படை ஆகிய இரண்டு ஆறுகள் மலையிலிருந்து உருவெடுத்து வருகிறது. அப்படி வருகின்றபோது அங்கே விளைநிலங்களோ, கிணறுகளோ, ஏரிகளோ, குளங்களோ கிடையாது. ஆகவே, அரசின் கோட்பாட்டுக்கு இடையூறு இல்லாமல் இருக்கிற காரணத்தினால், சிரிய நீர்த்தேக்கங்கள் பொட்டியம் ஆற்றின் அருகிலும், கல்படை ஆற்றின் படுகையிலும் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது.

இரண்டு நீர்த்தேக்கங்கள் அங்கே கட்டிக்கொடுக்கின்றபொழுது, மூன்று போகங்கள் விளைவதற்கு நல்ல வாய்ப்பாக அமையும். ஆகவே, அமைச்சர் அவர்கள் அந்த கோமுகி அணையைத் தூர்வாரச் செய்வதோடு, இரண்டு நீர்த்தேக்கங்களையும், பொட்டியையும் கல்படை ஆற்றின் படுகையிலே கட்டித்தருவதற்கு அமைச்சர் அவர்கள்முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** இந்த அணையைப் பொறுத்தவரை நான் ஏற்கெனவே சொன்னேன் இது *save zone* பகுதியிலே அமைந்து இருக்கிறது. ஆனால், இருந்தாலும் இதை ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி ஏற்றுக்கொள்ளப்படும் .

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# கழகக் கொள்கை பரப்புத் துணைச் செயலாளர் பி.ஆர்.சுந்தரம் மறைவு!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி., அமைச்சர் மா.மதிவேந்தன், எஸ்.எம்.மதுரா செந்தில் அஞ்சலி!

நாமக்கல், ஜன.17-

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினரும், கழக மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளருமான பி.ஆர். சுந்தரம் காலமானார். நேற்று (16.01.2025 ) காலை 8 மணி அளவில் ராசிபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த பி ஆர் சுந்தரம் உடலுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே. ஆர்.என்.இராஜேஸ்குமார், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் மற்றும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தினர்.

பி.ஆர். சுந்தரம் (2.4. 1951-16.01.2025) சொந்த ஊர். ராசிபுரம் அருகே உள்ள பச்சுடையாம்பாளையம். மனைவி எஸ். சுந்தரி, மகன் சுந்தர் தினேஷ் அமெரிக்காவில் பணிபுரிந்து வருகிறார். இவர் 1996 - 2006 வரை இரண்டு முறை தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகவும், (2014 - 2019) வரை நாமக்கல் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார்.

ஒரு முறை பச்சுடையாம் பாளையம் பஞ்சாயத்து தலைவராகவும், ஒரு முறை மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினராகவும், ஒரு முறை மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவராகவும் இருந்துள்ளார்.

இவர் அதிமுகவில் 1997 முதல் 2000 வரை அதிமுக மாவட்ட செயலாளராகவும் 2001 முதல் அவைத்தலைவராகவும் இருந்துள்ளார். ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அதிமுகவில் இருந்து விலகி, தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 17.1.2021 திமுகவில் இணைந்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளராக இருந்து வந்துள்ளார்.

### கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர்

# பி.ஆர்.சுந்தரம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, ஜன. 17 -

கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளரும் நாமக்கல் நாடாளுமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினருமான பி.ஆர்.சுந்தரம் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

இராசிபுரம் சட்டமன்றத் தொகுதி மற்றும் நாமக்கல் நாடாளுமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் பி.ஆர். சுந்தரம் அவர்கள் மறைந்ததை அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

மிக நீண்ட அரசியல் அனுபவம் கொண்ட சுந்தரம் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமல்லாது அதற்கு முன்பும் பல்வேறு நிலைகளில் பல பொறுப்புகளில் சிறப்பாக மக்கள் பணி ஆற்றி வந்தவர் ஆவார். 2021ஆம் ஆண்டு முதல் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்து, கொள்கை பரப்பு துணைச் செயலாளராகவும் சுந்தரம் அவர்கள் பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், அரசியல் இயக்க நண்பர்கள், நாமக்கல் மாவட்ட மக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி முன்னிலையில்

# வேலூர் பழைய பேருந்து நிலையத்தில் திருவள்ளுவர் சிலைக்கு மரியாதை!

## மாநகர செயலாளர் ப. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மாலை அணிவித்தார்

வேலூர், ஜன.17-

திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு வேலூர் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள அவரது உருவ சிலைக்கு மாநகர தி.மு.க சார்பில் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம். எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், கொள்கை பரப்பு துணை செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் டாக்டர் வி.எஸ். விஜய், வேலூர் ரமேஷ், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், பகுதி செயலாளர்கள் எஸ். தயாள்ராஜ், பாலமுரளி கிருஷ்ணன், வி.ஜி.கே.சுந்தர விஜி, மண்டல குழு தலைவர் வீனஸ் நரேந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் முருகப்பெருமாள், வி.எஸ்.முருகன், ஜெய்சங்கர், மாநில சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு அமைப்பாளர் நூருல்லா, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தேவராஜ்,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி.எம்.டி.பாலாஜி, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் யூ.ரவிக்குமார், துரை அரசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தாம்பரம் மாநகராட்சி 52 வது வார்டு கன்னடபாளையம் மேற்கு தாம்பரத்தில் பொங்கல் விழாவை முன்னிட்டு கன்னடபாளையம் இளைஞர்கள் நடத்தும் 25ஆம் ஆண்டு பொங்கல் விழாவில் மாநகர செயலாளர் எஸ்,ஆர்,ராஜா, எம்,எல்,ஏ; கலந்து கொண்டு10,12,வகுப்பில் தேர்ச்சி பெற்ற முதல் மூன்று இடங்களை வென்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார் உடன் 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் காமராஜ், மாமன்ற உறுப்பினர் எல்ங பெரியநாயகம், வட்ட செயலாளர் எம் விஜயன், தொகுதி தகவல் தொழில்நுட்ப அணியின் ஒருங்கிணைப்பாளர் .முகுந்தன், ஆர்.திவாகர், எம்.ராஜோந்திரன், கே.மாணிக்கம், எம்.ஏழுமலை, கே.நந்தகுமார், பி.கோபி மற்றும் பகுதி நிர்வாகிகள்,வட்ட நிர்வாகிகள்,நலச்சங்க நிர்வாகிகள்,கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர் .



மாங்காடு நகர 7.8.ஆகிய வார்டுகளின் சார்பில் நகர மன்ற உறுப்பினர் மாவட்ட திட்ட குழு உறுப்பினர் பெருமாள்ராஜ் ஏற்பாட்டில் மாபெரும் கோல போட்டிகள் நடைபெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசு ஃபிரிட்ஜ் இரண்டாம் பரிசு வாஷிங் மெஷின் மூன்றாம் பரிசு கிரைண்டர் ஆகியவையும், ஆட்டோ ஓட்டுனர்களுக்கு சீருடை 200 பேர்களுக்கு அரிசி, 300 பேர்களுக்கு புடவை ஆகிய நலத்திட்ட உதவிகளையும் நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா வழங்கினார். உடன் நகர இளைஞர் அணி அமைப்பாளர் ஆர். சாரதி, தொகுதி ஒருங்கிணைப்பாளர் தம்பிதுரை நகர துணை அமைப்பாளர்கள் சங்கர் ஆர்.சுசிலா ராதாகிருஷ்ணன் வார்டு கழக செயலாளர்கள் வி.பிரகாஷ், எம்.பிரபு, ஜி.மகாலிங்கம், எஸ்.துரை, எஸ். பழனி, பி.முருகையன், எம்.ஜெ.ரகு, எம்.எம்.கணபதி, எம்.விஜய்குமார் மாணவர் அணி எம்.வல்லரசு நகர மகளிர் அணியினர் எஸ்.லதா எஸ்.நளினி, வி.வள்ளி, கே.டி.கலைச்செல்வி நகர நிர்வாகிகள் வாசுதேவன் ஜெயக்குமார் இ.கோபி, எஸ்.அக்ரம், ஒய்.நவின், ஆர்.சக்தி மற்றும் கழக தோழர்கள் உள்ளனர்.

### டி.காமராஜ் பங்கேற்பு!

# தாம்பரத்தில் பொங்கல் விழா!

## எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பரிசு வழங்கினார்!

தாம்பரம், ஜன. 17-

தாம்பரம் மாநகராட்சி மண்டலம்-4 பெருங்களத்தூர் வடக்கு பகுதி 52வது வார்டு கன்னடபாளையம் மேற்கு தாம்பரத்தில் பொங்கல் விழாவை முன்னிட்டு கன்னடபாளையம் இளைஞர்கள் நடத்தும் 25ஆம் ஆண்டு பொங்கல் விழா நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ; சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 10, 12, வகுப்பில் தேர்ச்சி பெற்ற முதல் மூன்று இடங்களை வென்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

இதில் 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ், மாமன்ற உறுப்பினர் எல். பெரியநாயகம், வட்ட செயலாளர் எம்.விஜயன், தொகுதி தகவல் தொழில்நுட்ப அணியின் ஒருங்கிணைப்பாளர் செ. முகுந்தன், ஆர்.திவாகர், எம். ராஜேந்திரன், கே. மாணிக்கம், எம்.ஏழுமலை, கே.நந்தகுமார், பி.கோபி மற்றும் பகுதி நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், நலச்சங்க நிர்வாகிகள், கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் இவ் விழாவில் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட விவசாய தொழிலாளர் அணி சார்பில் சமத்துவ பொங்கல் விழா ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் திருவள்ளூர் மத்திய மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளரும் மாவட்ட பிரதிநிதி மு.இளையான் ஏற்பாட்டில் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் மோப்பூர் ஊராட்சியில் நடைபெற்றது. இதில் மாநில ஆதிதிராவிட நலக்குழு அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம். எல்.ஏ, பொங்கல் விழா தொடங்கி வைத்து கலை நிகழ்ச்சி பங்கேற்ற குழந்தைகளுக்கு மற்றும் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் பேரூர் செயலாளர் தி.வே.முனுசாமி, பொதுக்குழு உறுப்பினர் வி.குமார், ஒன்றிய நிர்வாகிகள் ஏ.ஜனார்த்தனன், ஏ.ஆர்.பாஸ்கர், நிர்வாகிகள் வி.என்.சிற்றரசு, பரிமளழகன், டி.குமரேசன், ஏ.ஜி.ரவி, பேட்டை திருமலை ராஜ், வி.தணிகாசலம், எம்.ராம்பாபு, கேசவன், சாய் மோகன், நாசா.பாலா, சுமதி அத்திகிரி, கே.ஜி.ஆர்.ஸ்டாலின், முரளி, அழகிரி, பவானி, ஞானமூர்த்தி, லிங்கேஷ்குமார், ஏழுமலை, மாரியப்பன், ஜி.கே.மணி, ஆறுமுகம், பாபு, நித்திய லட்சுமி, விசாலாட்சி, கவிதா ஆனந்தன், உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்கள்.




சென்னை தென் மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி, 135 (அ) வட்டத்தில் திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு கோலப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி பரிசுகள் வழங்கினார். உடன் தியாகராயர்நகர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, 135 (அ) வட்டக் கழகச் செயலாளர் மு. செல்வகுமார், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் மோனிஷா கருணாநிதி கலந்து கொண்டனர்.